# உலகத் தாய்மொழி தினம்
## பெப்ரவரி 21

# தமிழ்

உன் அடையாளம்

# International Mother Language Day
## February 21

மேழி

Mezhi

## மேழி தமிழ் பாடசாலை ~ தமிழ் உன் அடையாளம்

தமிழ் மொழி மற்றும் வரலாறு

5 வயது முதல்

கணிதம், இரசாயனவியல், மற்றும் உயிரியல்

8 வயது முதல் மேல் நிலை வரை

தொடர்புகளுக்கு: தமிழ்வாணி விஜி

தொலைபேசி: 07565152463

மின்னஞ்சல்: mezhi1601@gmail.com

நூலாக்கம் ~ மேழி தமிழ் பாடசாலை

நூல் வடிவமைப்பு ~ தமிழ் இளையோர் அமைப்பு பிரித்தானியா

# முன்னுரை

மொழியை இழந்த சமூகம் வரலாற்றையும் இழந்துவிடும். ஆகையால் தமிழ் இளையோர்கள் ஆகிய நீங்கள் தாய்மொழியில் பேசவேண்டும் வரலாற்றை அறிந்கொள்ளவேண்டும் எமது பூர்வீகத்தை தெரிந்து கொள்ளவேண்டும். அத்துடன் எமது மொழியையும் தனித்துவ அடையாளத்தையும் வரலாற்றையும் புலம்பெயர் நாடுகளிலே பாதுகாக்க வேண்டும்.

மேலும் பெற்றோர்களுக்கும் ஒரு உருக்கமான வேண்டுகோள். தமிழ் எங்கள் அடையாளம் அடையாளத்தை இழந்தால் இந்த பூமிப்பந்தில் உங்கள் குழந்தைகள் அனாதைகள். எங்கள் மொழியை அழித்து வரலாற்றை மறைத்து அவர்களை அனாதைகள் ஆக்கிவிடாதீர்கள். தமிழர்களாக அவர்களை அடையாளப்படுத்துங்கள்.

எமது தேசத்தின் ஆக்க கர்த்தாக்களாக ஒரு புதிய இளம் சமுதாயம் தோற்றங்கொள்ள வேண்டும். ஆற்றல் மிகுந்தவர்களாக, அறிவுஜீவிகளாக தேசப்பற்றானர்களாக வல்லுனர்களாக நேர்மையும் கண்ணியமும் மிக்கவர்களாக ஒரு புதிய புரட்சிகரமான பரம்பரை தோன்ற வேண்டும். இந்தப் பரம்பரையே எமது தேசத்தின் நிர்மாணிகளாக நிர்வாகிகளாக ஆட்சியாளர்களாக உருப்பெறவேண்டும் என்ற தேசியத்தலைவரின் கனவை நனவாக்கும் முயற்சியே இந்த புத்தகத்தின் உருவாக்கம்.

**"தமிழரின் தாகம் தமிழீழத்தாயகம்"**

**மேழி தமிழ் பாடசாலை**

# எங்கள் நாடு


Jaffna
யாழ்ப்பாணம்
Kilinochchi
கிளிநொச்சி
Mullaithivu
முல்லைத்தீவு
Mannar
மன்னார்
Trincomalee
திருகோணமலை
Vavuniya
வவுனியா
Batticaloa
மட்டக்களப்பு
Puttalam**
புத்தளம்
Amparai
அம்பாறை
தமிழீழம்
Tamil Eelam

எங்கள் மொழி

# தமிழ் வாழ்க

அ ஆ இ ஈ


உ ஊ எ ஏ

ஐ ஒ ஓ

ஔ ஃ

# எங்கள் இனம் - ஈழத்தமிழர்

# எங்கள் புத்தாண்டு - திருவள்ளுவர் ஆண்டு சுறவம் (தை) முதலாம் நாள்



# எங்கள் தேசியத் தலைவர்
# மேதகு திரு வேலுப்பிள்ளை பிரபாகரன்

தமிழீழத்தின் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் 1954 ஆம் ஆண்டு கார்த்திகை திங்கள் 26ம் நாள் வல்வெட்டித்துறையில் பிறந்தார்.

1976 ஆம் ஆண்டு மே மாதம் 5ஆம் தேதி 'புதிய தமிழ்ப் புலிகள்' என்ற இயக்கத்தை 'தமிழீழ விடுதலைப் புலிகள்' என்று புதிய பெயரிட்டு விடுதலைப் போராட்டத்திற்கான உறுதியான அடித்தளத்தை அமைத்தார்.



விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தோற்றமானது தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை உருவாக்கியது. தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டமே புதிய திருப்பம் பெற்றது.

# எங்கள் தேசியக் கொடி



எமது தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களால் உருவாக்கப்பெற்ற புலிக்கொடி 1977 ஆம் ஆண்டு முதல் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கொடியாக இருந்துவருகிறது. விடுதலைப்புலிகள் இயக்கத்தின் கொடியிலுள்ள எழுத்துக்கள் நீக்கப்பெற்ற கொடி தமிழீழத் தேசியக் கொடியாகத் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் 1990 ஆம் ஆண்டு அறிவிக்கப்பெற்றது. தமிழீழ விடுதலைப் போரில் வீரச்சாவடைந்த மாவீரர்களை நினைவுகூர்ந்த இரண்டாவது மாவீரர் நாளில் அதாவது 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ஆம் நாள் முதல் தடவையாகத் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களால் அவரது பாசறையில் ஏற்றிவைக்கப்பெற்றது.

'தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்'

# ஏங்கள் தேசிய நிறங்களும் குறிக்கோளும்

எமது தேசியக்கொடியை மஞ்சள், சிவப்பு, கறுப்பு, வெள்ளை ஆகிய நான்கு நிறங்கள் அழகுபடுத்துகின்றன.

தனிப்பாங்கான தேசிய இனமான தமிழீழத் தேசிய இனம் தனது சொந்த மண்ணில் தன்னாட்சி அமைத்துக்கொள்ள விழைவது அதனது அடிப்படை அரசியல் உரிமையும் மனித உரிமையுமாகும். தமிழீழ மக்கள் நடத்துகின்ற தேசிய விடுதலைப் போராட்டம் அறத்தின்பாற்பட்டது, நியாயமானது என்பதையும் தமிழீழத்தேசம் எப்பொழுதும் அறத்தின் பக்கம் நிற்குமென்பதையும் மஞ்சள் நிறம் குறித்து நிற்கிறது.

தேசிய விடுதலை பெற்ற தமிழீழத் தனியரசை அமைத்துவிடுவதால் மட்டும் முழுமையான விடுதலையைப் பெற்றுவிட்டதாகக் கொள்ளமுடியாது. தமிழீழக் குமுகாயத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகள் ஒழிக்கப்படவேண்டும். சாதிய, வகுப்பு முரண்பாடுகள் அகற்றப்பட வேண்டும். பெண்ணடிமைத்தனம் நீக்கப்படவேண்டும். இதற்குக் குமுகாய அமைப்பிற் புரட்சிகரமான மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும். சமன்மையும் சமதருமமும் குமுகாய நீதியும் நிலை நாட்டப்படவேண்டும். இத்தகைய புரட்சிகரமான குமுகாயமாற்றத்தை வேண்டிநிற்கும் எமது அரசியல் இலக்கைச் சிவப்பு நிறம் குறியீடு செய்கின்றது.

# எங்கள் தேசிய நிறங்களும் குறிக்கோளும்

விடுதலைப்பாதை கரடுமுரடானது சாவும் அழிவும் தாங்கொணாத் துன்பங்களும் நிறைந்தது. இவற்றைத் தாங்கிக் கொள்ளவும் விடுதலையடைந்தபின் ஏற்படப்போகும் நெருக்கடிகளையும் அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டு தேசத்தைக்கட்டியெழுப்பவும் பாதுகாக்கவும் உருக்குப் போன்ற உறுதியான உள்ளம் வேண்டும் அசையாத நம்பிக்கை வேண்டும் தளராத உறுதி வேண்டும். இவற்றைக் கறுப்பு நிறம் குறித்துக் காட்டுகின்றது.

விடுதலை அமைப்பும் மக்களும் தலைவர்களும் தூய்மையையும் நேர்மையையும் கடைப்பிடிக்க வேண்டுமென்பதை வெள்ளை நிறம் குறித்து நிற்கிறது.

நாட்டின் பசுமை, மேன்பாடு, வளர்ச்சிகளை பச்சை நிறம் குறித்து நிற்கிறது.

# எங்கள் தேசிய விழாக்கள்/திருநாள்

## பொங்கல்



## பொங்குதமிழ்



| ஃ | அ | ஆ | இ | ஈ | உ | ஊ |
|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ |
| த் | த | தா | தி | தீ | து | தூ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ |

# தமிழ் நெடுங்கணக்கு

| எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|
| கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| பெ | பே | பை | பொ | போ | பௌ |
| மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| னெ | னே | னை | னொ | னோ | னௌ |

# எங்கள் தேசிய நாள் ~ கார்த்திகை 27
# மாவீரர் நினைவெழிச்சி நாள்

இந்திய தமிழீழப்போர் உக்கிரம் அடைந்து கொண்டிருந்த காலப் பகுதியில் விடுதலைப்புலிகள் தினமும் தம்முயிரை தமிழீழ விடுதலைக்காக அர்ப்பணித்துக் கொண்டிருந்தனர். 1989, கார்த்திகை 27, அன்று அடர்ந்த தமிழீழக் காடு ஒன்றில் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள், முதலாவது விடுதலைப்புலிப் போராளி வீரச்சாவு அடைந்த நாளான கார்த்திகை 27ஐ மாவீரர் நாள் ஆகப் பிரகடனப்படுத்தி உரையாற்றும் போது, "எமது போராட்டத்தில் இன்று ஒரு முக்கியமான நாள். இதுவரை காலமும் எமது புனித இலட்சியமான தமிழீழ இலட்சியத்துக்காக உயிர்த் தியாகம் செய்த 1207 போராளிகளை நினைவு கூரும் முகமாக இந்த மாவீரர் நாளை நாங்கள் ஆரம்பித்துள்ளோம்."




# எங்கள் தேசிய விலங்கு

# சிறுத்தை

தமிழர் தாயகக் காட்டு கதாநயாகன் தான் சிறுத்தை. இதற்குத் துல்லியமான கேட்டல் திறமை, கூர்மையான பார்வைப்புலன் உண்டு. சிறுத்தையின் வண்ணம் காரணமாக இங்குள்ள வரண்ட காடுகள் அதற்கு நல்ல உருமறைப்பு. அதனால் சிறுத்தையைக் காடுகளில் இலேசாகத் தனித்துப் பார்க்கமுடியாது.

சிறுத்தை தமிழரின் தொன்மை சங்க இலக்கியங்களிலும் வருகின்றது. அதுவே தமிழீழத்தின் தேசிய விலங்ககாகப் பிரகடனப்படுத்தப்பட்டது.



# எங்கள் தேசிய பூ
# காந்தள் (கார்த்திகை பூ)

தமிழீழத்தின் தேசியப்பூ. இது கார்த்திகை மாதத்தில் பூப்பதன் காரணத்தால் இந்த பெயர் பயன் பாட்டில் உள்ளது. சங்க இலக்கியங்களில் இது காந்தள் எனக்குறிப்பிடப்படுகின்றது.

கிழங்கில் இருந்து குறித்த காலத்தில் மட்டும் முளைத்துப் பூத்து பின் மடிந்து நிலத்தின் கீழ் கிழங்கில் மட்டும் உயிர்வாழும் செடியும் பூவும்தான் கார்த்திகைப்பூ. அதன் உயிர்வாழ்வு விழவிழ எழுதல் என்ற பொருளையும் கொள்கிறதல்லவா.



# எங்கள் தேசிய மரம்

# வாகை

தமிழீழத்தின் தேசிய மரம். தமிழர் தாயகத்தின் மரபுரிமைச்சொத்தாக விளங்கி வரும் மரங்களில் தொன்மைத்தன்மை வாய்ந்ததாக வாகை உள்ளது. சங்ககாலத்தில் போரில் வெற்றிபெறும் வீரர்களுக்கு வாகை மலர் சூட்டப்படுதல் நடந்திருக்கின்றது. சங்க கால மரபின் மூலம் வாகை எந்தளவுக்கு தமிழருடன் இணைந்து வந்திருக்கிறது



# எங்கள் தேசிய பறவை

# செம்பகம்

தமிழீழத் தேசியப் பறவை செம்பகம். உலகின் அதிகமான நாடுகளின் தேசியப் பறவைகளாக பறப்புத் திறன் குறைந்த பறவைகளே இருக்கின்றன. இந்த வகையில் தமிழர் தாயகத்தில் பறப்புத்திறன் குறைந்த மரபுரிமைச் சொத்தாக உள்ள பறவைகளில் தனித்துவ அம்சங்கள் நிறைந்த செண்பகம் தேசியப் பறவையாகப் பிரகடனப்படுத்தப்படுள்ளது.

கறுப்பு உடலையும் காவிநிற செட்டைகளையும் கொண்ட செண்பகம் காகத்தை விட சற்றுப் பெரியது. நமது சூழலில் இவை தத்தித் தத்தி திரிவதை நாம் காணலாம். இது உலர்வலயப் பகுதிகளில் தான் அதிகம் உள்ளது.



மெதுவாக நடையும், தத்தித் தத்தித் பாய்தலும் இதன் தினத்துவ செயற்பாடுகள். பற்றைக்ள், சிறுமரங்களின் கீழ்ப்பகுதிகள் இதன் வாழிடங்கள். நத்தைகள், பூச்சிகள், அட்டைகள், தவளைகள், பாம்புகள், ஓணான்கள் செம்பகத்தின் உணவுகள் ஆகும்.

# எங்கள் தேசிய விளையாட்டு

# கிளித்தட்டு

கிளித்தட்டு அல்லது தாச்சி தமிழீழத்திலும், ஈழத்தமிழர்கள் வாழும் பல்வேறு உலக நாடுகளிலும் தமிழ்நாட்டிலும் பரவலாக விளையாடப்படும் விளையாட்டாகும். இது உடலுக்கு நல்ல பயன் தரும் விளையாட்டாகும். குறிஞ்சி நிலத்தில் தட்டு என்பது பாத்தி. பாத்தியில் விளைந்த கதிர்களைத் கொத்திச் செல்ல வரும் கிளிகளைத் கூட்டமாய் நின்று உழவர் துரத்தும் காட்சி போன்றதால் இதனைக் கிளித்தட்டு என்றர்.




# எங்கள் தேசிய பாடல்கள்

## கொடிப் பாடல் ~ "ஏறுது பார் கொடி ஏறுது பார்"
## நினைவெழுச்சிப் பாடல் ~ "தாயக் கனவுடன்"

# எங்கள் தேசிய இசைக்கருவி

# பறை (தாளா, தோல் வாத்தியம்)

பறை ஒரு தமிழிசைக் கருவியாகும். இது தோலால் ஆன மேளமாகும். 'பறை' என்ற சொல் பேச்சைக் குறிப்பதாகும். 'பேசு' எனப்பொருள்படும் 'அறை' என்ற சொல்லினின்று 'பறை' தோன்றியது. பேசுவதை இசைக்கவல்ல தாளக் கருவி 'பறை' எனப்பட்டது. பன்னெடுங்கால வரலாற்றைத் தன்னகத்தே கொண்டுள்ள பறை, ஓர் இசைக் கருவி மட்டுமல்ல தொல்குடித் தமிழ்ச் சமூகத்தின் சொத்து. தோலிசைக் கருவிகளின் தாய். தமிழினத்தின் தொன்மையான அடையாளம். உழைக்கும் மக்களின் இசைக் களஞ்சியம். தமிழர் வாழ்வியலின் முகம் என வருணிக்கப்படுகிறது. 'பறை' என்பது ஓடும் இசையை ஒழுங்கு பெற நிறுத்தி ஓர் அளவோடு சீரோடு, ஒத்த அழகோடு நடக்க, இசைக்கு நடை கற்பிக்கும் கருவி.



# யாழ் (ராக வாத்தியம்)

யாழ் என்பது பண்டைய இசைக்கருவிகளில் மிகச் சிறப்பு வாய்ந்தது ஆகும். யாழ் என்பதற்கு நரம்புகளால் யாக்கப்பட்டது அல்லது கட்டப்பட்டது என்பது பொருள். பொதுவாக இசையைத் தோற்றுவிக்கும் கருவிகளைத் தோற்கருவி, துளைக்கருவி, நரம்புக் கருவி, மிடற்றுக் கருவி என்று வகைப்படுத்துவர்.



இவற்றில் நரம்புக்கருவியாகிய யாழே, தமிழர் வாசித்த முதல் இசைச் கருவியாகும். குறிஞ்சி நிலத்தில் பயன்பாட்டில் இருந்த கருவிகளின் ஒன்று வில். வில்லில் முறுக்கேற்றிக் கட்டப்பெற்ற நாணிலிருந்து அம்பு செல்லும்பொழுது தோன்றிய இசையே யாழின் உருவாக்கத்திற்கு தோற்றுவாய் இருக்க வேண்டும்.

# எங்கள் தேசிய நடனம்

## கூத்து

கூத்து தமிழர்களின் பாரம்பரிய நாட்டர் கலை வடிவங்களில் ஒன்று. கிராமத்தின் மண்வாசனையையும், கிராம மக்களது வாழ்வாதாரங்களையும், அவர்கள் மதம் மீது கொண்ட பற்றுதலையும் வெளிப்படுத்தும் வகையில் அமைவது கூத்துக்கலை. கூத்துக்கள் பல்வேறு செய்திகளை சமூகத்திற்குச் சொல்கின்றன.



முற்காலத்தில் வாழ்ந்தவர்கள் பொழுது போக்கிற்காகவும், தங்களது களைப்பைப் போக்கும் செயற்பாடாகவும் ஒரு முற்றத்தில் ஒன்று கூடி ஆடிப்பாடி மகிழ்ந்தனர். அதுவே நாளடைவில் பல்வேறு பரிணாமங்களைப் பெற்று கலைகளாகத் தோற்றம் பெற்றது. அவர்கள் அன்று பொது முற்றத்தில் ஆடியவை இன்று கூத்து என்ற பெயரைப் பெற்று வளர்ந்து நிற்கின்றன. பல நூற்றாண்டுகளுக்கு முன்பாக இந்தக் கூத்துக்கள் உருவாக்கப்பட்டிருந்தாலும் இந்தக் கூத்துக்களின் கதையம்சமும், கூத்துக்களினூடாக கூறப்படும் செய்திகளும் தற்போதைய சமூகத்தினரையும் ஈர்ப்பவையாக அமைந்துள்ளன.

# சிந்தனை துளிகள்

☆ "எமது மொழியும், கலையும், பண்பாடும் எமது நீண்ட வரலாற்றின் விழுதுகளாக எமது மண்ணில் ஆழமாக வேரூன்றி நிற்பவை. எமது தேசிய வாழ்விற்கு ஆதாரமாய் நிற்பவை" தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்

☆ "மொழியும் கலையும் கலாசாரமும் வளம் பெற்று வளர்ச்சியும் உயர்ச்சியும் அடையும் பொழுதே தேசிய இனக் கட்டமைப்பு இறுக்கம் பெறுகின்றது. பலம் பெறுகின்றது. மனித வாழ்வும் சமூக உறவுகளும் மேன்மை பெறுகின்றது. தேசிய நாகரிகம் உன்னதம் பெறுகின்றது" தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன்

☆ "ஓர் இனத்தை அடிமைபடுத்த வேண்டுமாயின் அவ்வினத்தின் மொழியையும் இலக்கியத்தையும் அழித்தாலே அவ்வினம் தாமாகவே அடிமையாகிவிடும்"
சீனப் பழமொழி

☆ "இனத்தைச் செய்தது மொழிதான் ~ இனத்தின் மனத்தைச் செய்தது மொழிதான் ~ மனத்தை மொழிப்பற் றினின்று பிரிப்பது முயற்கொம்பே"

பாரதிதாசன்

# NATION DEVELOPMENT

# MEDIA

## SPORTS

## EDUCATION AND CAREER DEVELOPMENT

## ANALYSIS AND ADVOCACY

## ARTS AND CULTURE

EMPOWERING YOUTH TO EXCEL AS LEADERS
AND ARCHITECTS OF OUR NATION

TO FIND OUT MORE AND TO BECOME A MEMBER, VISIT

/tyoukmedia @tyouk /tyoukmedia

info@tyouk.org www.tyouk.org

**தமிழ் இளையோர் அமைப்பு**

**TAMIL YOUTH ORGANISATION**